THE HINDU-17-MAR-2020

# அனைத்து நாடுகளிலும் ஈஷா நிகழ்ச்சிகள் ரத்து

- மருத்துவப் பரிசோதனைக்கு பிறகே யோகா மையத்துக்குள் அனுமதி

**கோவை**

மத்திய அரசின் பொது சுகாதாரத் துறையின் ஆலோசனையை உடனடியாக செயல்படுத்தும் வகையில், ஈஷா யோகா மையம் சார்பில் உலகம் முழுவதும் நடைபெறவிருந்த அனைத்து விதமான நிகழ்ச்சிகளும், மறுதேதி குறிப்பிடப்படாமல் ரத்து செய்யப்பட்டுள்ளன.

பல்லாயிரக்கணக்கானோர் வந்து செல்லும் கோவை ஈஷா யோகா மையத்தில், கோவிட்-19 வைரஸ் பரவாமல் தடுப்பதற்காக பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈஷா யோகா மைய நிறுவனர் சத்குரு மும்பையில் நடத்தவிருந்த 'இன்னர் இன்ஜினீயரிங்' நிகழ்ச்சியும், ஏப்ரலில் அவர் மேற்கொள்ளவிருந்த தென்னாப்பிரிக்க பயணமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேலும், யோகா வகுப்புகளை நடத்துவதற்காக பயணிக்கும் யோகா ஆசிரியர்களும், தங்கள் பயணங்களை உடனடியாக நிறுத்தி வைத்துள்ளனர்.

கோவை ஈஷா யோகா மையத்துக்கு வரும் அனைவரும், மருத்துவப் பரிசோதனைக்கு பிறகே உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். ஈஷா மையத்தில் தங்கி இருப்பவர்களுக்கு, 3 நாட்களுக்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளது. ஈஷா மையத்துக்குள் உள்ள அனைத்து இடங்களும் சுத்தமாக இருக்க கிருமிநாசினிகள் வைக்கப்பட்டுள்ளன. மேலும், ஆதியோகி சிலையை தரிசிக்க வரும் மக்களும், இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

இதுகுறித்து சத்குரு கூறும்போது, "அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும். வைரஸ் தொற்றை மற்றவர்களுக்கு பரப்பாமல் இருக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வு அனைவருக்கும் அவசியம். இதை ஒரு உறுதியாக எடுத்து செயல்படுத்த வேண்டும்" என்றார்.

இதேபோல, ஈஷா யோகா மையத்துக்கு வரத் திட்டமிட்டுள்ளவர்களுக்கு, மத்திய அரசு வெளியிட்டுள்ள பயண ஆலோசனையின் அடிப்படையில் வழிகாட்டு நெறிமுறைகள் அனுப்பப்பட்டுள்ளன. கடந்த 28 நாட்களில் சளி, இருமல், காய்ச்சல், தலைவலி, தொண்டை வலி உட்பட கோவிட்-19 வைரஸ் பாதிப்புக்கான அறிகுறிகள் இருப்பவர்கள் அல்லது இந்த அறிகுறி இருக்கும் நபருடன் நெருக்கமாக தொடர்பில் இருந்தவர்கள், தங்கள் பயணத்தை தவிர்க்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.